# வாக்கியம் அமைத்தல்

## ( கா-கு )

1. காந்தி

   நம் தேச தந்தை காந்தி.

2. காடு

   புலி காட்டில் வாழும்.

3. காற்று

   புயல் காற்று வேகமாக வீசியது.

4. கால்

   யானைக்கு நான்கு கால்கள் உண்டு.

5. காற்றாடி

   உன் காற்றாடி மிகவும் அழகாக இருக்கிறது.

6. காலம்

   காலம் பொன் போன்றது.

7. கிளி

   கிளி பறக்க முயற்சி செய்கிறது.

8. கிண்ணம்

   பாப்பா கிண்ணத்தில் சாப்பிட்டாள்.

9. கிணறு

   தோட்டத்தில் கிணறு இருக்கிறது.

Notebook writer

10. கிழக்கு

சூரியன் உதிக்கும் திசை கிழக்கு.

11. கிராமம்

கிராமம் மிகவும் அழகாக இருக்கும்.

12. கிளை

குரங்கு மரக்கிளையில் தொங்கியது.

13. கீரை

கீரையில் இரும்பு சத்து இருக்கிறது.

14. கீதம்

நாம் தேசிய கீதத்தை மதிக்க வேண்டும்.

15. கீழே

சிறுவன் கீழே விழுந்தான்.

16. கீரி

பாம்பின் எதிரி கீரி.

17. குரல்

உன் குரல் குயில் போல் இருக்கிறது.

18. குற்றம்

குற்றம் செய்பவனுக்கு தண்டனை நிச்சயம்.

19. குட்டை

இந்த வகை நாய் குட்டையாக தான் இருக்கும்.

Notebook Writer

20. குண்டு

மும்பையில் குண்டு வெடித்தது.

Notebook writer
Notebook writer
Notebook writer